

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (5.10.2023) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் இராயபுரம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட செட்டித்தோட்டம் திட்டப்பகுதியில் ரூ.45.35 கோடி மதிப்பீட்டில் 243 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். உடன் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதிவீராசாமி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர். மூர்த்தி, மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.கீதாசுரேஷ் வாரிய தலைமைப்பொறியாளர் வே.சண்முகசுந்தரம், நிர்வாகப்பொறியாளர் ச.சுடலைமுத்துகுமார், வாரியப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (05.10.2023), சென்னை, எழும்பூர், அரசு நலவாழ்வு மற்றும் குடும்ப நல பயிற்சி மையத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் சிங்கப்பூர் சர்வதேச குழுமம் இணைந்து மகப்பேறுகால அவசர சிகிச்சை சேவை திறன்மேம்பாடு செயல்முறை விளக்கத்தினை பார்வையிட்டார். இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், சிங்கப்பூர் குடியரசின் கான்சுலேட் ஜெனரல் எட்கர் பாங், சிங்கப்பூர் சர்வதேச குழுமத்தின் இயக்குநர் திருமதி.விஜயா ராவ், சிங்கப்பூர் கே.கே.பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை சீனியர் கன்சல்டன்ட் மருஷிஃபாலி தாகூர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் (சிறப்பு பணி அலுவலர்) மரு.வடிவேலன், கூடுதல் இயக்குநர் மரு.சேகர், மரு.அ.சோமசுந்தரம், இணை இயக்குநர் (தா.சே.ந) மரு.ஜா.நிர்மல்சன், மரு.சம்பத்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை மற்றும்

# சிங்கப்பூர் சர்வதேச குழுமம் இடையேயான மகப்பேறு கால அவசர சிகிச்சை சேவை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

சென்னை,அக்.6-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் முன்னிலையில், நேற்று (05.10.2023), சென்னை, எழும்பூர், அரசு நல வாழ்வு மற்றும் குடும்ப நல பயிற்சி மையத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை மற்றும் சிங்கப்பூர் சர்வதேச குழுமம் ஆகியவற்றிற்கு இடையே யான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது, பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை மற்றும் சிங்கப் பூர் சர்வதேச குழுமம் இணைந்து மகப்பேறுகால அவசர சிகிச்சை சேவை திறன் மேம்பாடு செயல்முறை விளக் கத்தினை பார்வையிட்டார்.

பின்னர் அமைச்சர் செய்தி யாளர்களிடம் தெரிவித்ததா வது;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையும், சிங்கப் பூர் சர்வதேச குழுமமும் ஒருங் கிணைந்து பயிற்சி முகாம் இன்று தொடங்கப்பட்டு இருக்கிறது, அதற்கான புரிந்து ணர்வு ஒப்பந்தம் சிங்கப்பூர் குடியரசின் கான்சுலேட் ஜெனரலும் நம்முடைய பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அவர்களும் பரிமா றிக் கொண்டார்கள். தமிழ் நாட்டின் முதலமைச்சர் அவர் களின் தொலைநோக்கு பார்வை என்பது குழந்தைகள் மற்றும் பெண்கள் நலனை சார்ந்தது ஆகும். எனவே இவர் களுக்கான இந்தப் பயிற்சி என் பது பெரிய அளவில் பயனுள் ளதாக இருக்கும். தமிழ்நாட்டில் மருத்துவர்கள் மற்றும் செவிலி யர்களின் அவசரகால மகப் பேறு சிகிச்சைகள், பச்சிளங்கு ழந்தைகள் உயிர்ப்பித்தல் திறன்களை மேம்படுத்துவதற் கும், தாய் மரணம் விகிதம் மற் றும் சிசு மரணம் விகிதத்தை மேலும் குறைப்பதற்கும் இது போன்ற சர்வதேச குழுமத்திடம் இணைந்து செயல்படும் திட் டம் பெரிய அளவில் உறுது ணையாக இருக்கும். அதனால் ஏற்கெனவே சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இவர்களை சந்தித்து அங்கு செய்யப்படும் மருத்துவ முறை களை நம்முடைய மருத்துவர் களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் உறுதுணையாக இருக் கும்.

தமிழ்நாட்டில் வருடத் திற்கு சுமார் 10 இலட்சம் கர்ப் பங்கள் பதிவாகின்றனது. இந்த 10 இலட்சம் கர்ப்பங்களில் தாய் மரண விகிதத்தையும், சிசு மரண விகிதத்தையும் குறைப்பதற்குரிய நடவடிக் கைகளை சிங்கப்பூர் மருத்து வர்களின் உதவியோடு செய்வ தற்கு நடவடிக்கை எடுக்கப்ப ட்டு வருகிறது. தமிழ்நாட் டைப் பொறுத்தவரை 2021 2022 ஆம் ஆண்டுகளில் ஒரு இலட்சம் பிரசவங்களில் தாய் மரணம் இறப்பு விகிதம் என் பது 90 ஆக இருந்தது. தமிழ் நாட்டின் முதலமைச்சர் அவர் களின் அறிவார்ந்த ஆலோச னையின்படி இந்தக் கட்ட மைப்பை மேம்படுத்தி மருத் துவ சேவையினை மிகப்பெரிய அளவில் விழிப்புணர்வை ஏற் படுத்தியதன் விளைவாக தற் போது 52 ஆக குறைந்திருக்கி றது. மேலும் தாய் மரண விகி தத்தை குறைப்பதற்கு சர்வ தேச குழுமத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் இந்த திட்டம் உறுதுணையாக இருக் கும். சிங்கப்பூரை பொறுத்த வரை தாய் மரணம் விகிதம் என்பது ஒரு இலட்சத்திற்கு 10 ஆக இருக்கிறது. எனவே அவர் களுடைய பயிற்சி முறைகள், மருத்துவ முறைகள் நமக்கு மிகப் பெரிய அளவில் பயனுள் ளதாக இருக்கும்.

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் 2011 ஆம் ஆண்டு இந்தி யாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் ஒரு மருத்துவக் கல்லூரி கொண்டு வரவேண்டும் என்ற சிறப்பான அறிவிப்பை சட்டமன்றத்தில் கொண்டுவந்தார்கள். அதன் தொடர்ச்சியாக இன்று தமிழ் நாட்டில் 36 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன, எனினும் புதிதாக உருவாகியிருக்கின்ற 6 மாவட்டங்களுக்கு மருத்துவக் கல்லூரிகள் இல்லாத நிலை உள்ளது. 2 ஆண்டுகளுக்கு முன்னர் கூட இந்திய பிரதமர் மாவட்டத்திற்கு ஒரு மருத்து வக் கல்லூரிகள் கொண்டு வரப்படும் என்று அறிவித்தார் கள். ஆனால் தற்போது தேசிய மருத்துவ ஆணையம் (National Medical Council) இந்தியாவின் தென்மாநிலங்களில் அதிக மான மருத்துவக் கல்லூரிகள் உள்ளது என்றும் எனவே புதி தாக மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்படாது என்பது போன்ற அறிவிப்பை வெளி யிட்டுள்ளார்கள். முன்னரே மயிலாடுதுறை, தென்காசி, பெரம்பலூர், இராணிப் பேட்டை, திருப்பத்தூர் மற் றும் காஞ்சிபுரம் ஆகிய 6 மாவட்டங்களுக்கு புதிய மருத்தவக் கல்லூரிகள் வேண் டும் என்ற கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. ஒன்றிய சுகா தாரத் துறை அமைச்சர் அவர்களிடமும் இது தொடர் பான கோரிக்கை கொடுக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில் தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்ட அறிக்கைக்கு பிறகு நேற்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஒன்றிய பிரத மர் அவர்களுக்கு இதுதொடர் பான கடிதம் எழுதியுள்ளார் கள். இன்றைக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அரசு முதன்மை செயலாளர் , புதுடெல்லியில் நடைபெறும் பட்ஜெட் தொடர்பான விவாத கூட்டத் தில் கலந்து கொள்ள சென்றுள் ளார்கள். அவர்களிடம் ஒன் றிய சுகாதாரத் துறை செயலா ளர் அவர்களிடம் இந்த பிரச் சணை தொடர்பாக பேச கூறப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு தேசிய மருத்துவ ஆணையத்தால் தெரிவிக்கப்பட்ட புகாரான தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை மற்றும் திருச்சி மருத்து வக் கல்லூரி மருத்துவமனைக ளில் உள்ள சிறிய குறைகளான CCTV கேமராக்கள் இல்லை என்பது போன்ற குறைகள் சரி செய்யப்பட்டு கடிதங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டிற்கு புதிய மருத்துவக் கல்லூரிகளே வேண்டாம் என்பது போன்ற அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப் படாது. மதுரை அரசு மருத்து வக் கல்லூரியில் நடைபெற்ற பிரச்சணை தொடர்பாக நாளை மருத்துவம் மற்றும் மக் கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர்கள் விசாரணை நடத்தவுள்ளார்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### உலக சுற்றுலாப் பயணிகள் விரும்பும் வகையில்

# தமிழ்நாட்டை மேம்படுத்த பல்வேறு திட்டப் பணிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வுக் கூட்டத்தில் பேச்சு

சென்னை, அக். 6 -

சுற்றுலா மேம்பாட்டுத் திட் டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தல மாக தமிழ்நாட்டை உருவாக்கும் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்று லாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலு வலர்களுக்கான ஆய்வுக் கூட் டம் சுற்றுலாத்துறை அமைச் சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண் பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலா ளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக் டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் .சந் தீப் நந்தூரி ஆகியோர் முன்னி லையில் நேற்று (05.10.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச் சர் கா.ராமச்சந்திரன் பேசுகை யில் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியா விலேயே தமிழ்நாடு அதிக அள வில் வெளிநாட்டு மற்றும் உள் நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலா மையமாக முன்னேறி உள்ளது. தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழு வதும் அதிக சுற்றுலா பயணி கள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் பல் வேறு சுற்றுலா வளர்ச்சித்திட் டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் மேற்கொள்ளும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களா ல் கட்டப் பட்ட பூம்புகார் கலைக்கூடம் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், பிச் சாவரம் சுற்றுலாத்தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்ப டுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்று லா த்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் மேம்ப டுத்தும் பணிகளும் நடை பெற்று வருகின்றன.



முட்டுக்காடு படகு இல்லத் தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் தனியார் மற்றும் பொது பங்க ளிப்பு திட்டத்தின் கீழ் 200 நபர்கள் அமரும் வகையிலான இரண்டு அடுக்குகள் கொண்ட மிதவை உணவக கப்பல் அமைக்கும் பணி விரைந்து நடைபெற்று வருகின்றது. மாமல்லபுரத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் பொழுதுபோக்கிற்காக தனி யார் மற்றும் பொது பங்க ளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திலான ஒளிரும் பூங்கா அமைக்கும் பணிகள் நடை பெற்று வருகின்றன.

கொல்லிமலையை பல் வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத்தலமாக மாற்றும் பணிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டிலும், உதகை படகு குழாமில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் மரவீடுகள், மரத் தின் மேல் வீடுகள், குடில் வீடு கள் உள்ளிட்ட சுற்றுலா மேம் பாட்டு பணிகளும், ஜவ்வாது மலையில் ரூ.2.91 கோடி மதிப் பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஏலகிரி மலையில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிக ளும், திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரியில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் படகு சவாரி, நீர் விளையாட் டுகள் உள்ளிட்ட வசதிகள் ஏற் படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலையில் ரூ.2.23 கோடி மதிப் பீட்டில் சாகச சுற்றுலா, திறந்த வெளி முகாம்கள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா மேம் பாட்டு பணிகளும் நடை பெற்று வருகின்றன.

'தென்னிந்தியாவின் ஸ்பா" என்று அழைக்கப்படும் குற்றா லத்தை ரூ.11.34 கோடி மதிப் பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுத்தும் பணிக ளும், கன்னியாகுமரி மாவட் டம் முட்டம் கடற்கரை மற் றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி ஆகிய சுற்றுலாத்த லங்களில் ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளும், தூத்துக்குடி கடற் கரையை ரூ.1.70 கோடி மதிப் பீட்டில் நீர் விளையாட்டுக்கள் மற்றும் கடற்கரை விளையாட் டு கள் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட கடற்கரை சுற்று லாத் தலமாக மேம்படுத்தப்ப டுத்தும் பணிகளும், புதுக் கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்க ரைப் பகுதியை ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுகள், படகு சவாரி, நடைபாதை, கடற் கரை விளையாட்டுகள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிக ளும் மேற்கொள்ளப்பட்டு அதனை செயல்படுத்தும் பணி கள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா தலங்களில் வளர்ச் சித்திட்டப்பணிகளை மேற் கொள்ளும்போது வாகன நிறுத்தும் இடம், சுகாதார வளாகம் அமைத்தல் பணிக ளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர் கள் பணியா ற்றிட வேண்டும். அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுலா திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் பயன் பா ட்டிற்கு வரும் வகையில் விரைந்து பணிகளை மேற் கொள்ள வேண் டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணி கள், உலக சுற்றுலா பயணிக ளின் விருப்பமான முக்கிய சுற் றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும்

இவ்வாறு அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.இ. கமலா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக திட்ட பொறி யாளர், உதவி செயற்பொறியா ளர்கள் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவ லர்கள் கலந்து கொண் டனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்

# நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் இல்லந்தோறும் திமுக இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி அறிவிப்பு

நாமக்கல் அக்.6

நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் கே.ஆர்.என்.இரா ஜேஸ்குமார் எம்.பி அறிவித் துள்ளதாவது:

நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் நளா ஹேட் டலில் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் வரவேற்புரை ஆற் றினார் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ.இளம்பரிதி எம்.கார்த்திக், ரமேஷ், பிரபாகரன், கலைவா ணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பா.கிருபா கரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாமக் கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கி கூட்டப்பொருள் குறித்து விளக்கமளித்தார்.



கூட்டத்தில், நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் ஒவ்வொரு கிராமங்களி லும் கிளைகள் தோறும், இல்லந்தோ றும் திமுக இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் அமைத்து நடத்தப்பட வேண் டும்,

வரும் 10 தேதி நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் காலை 9 மணிக்கு ஒன்றிய, நகர, பேரூர்களில் இளைஞர் அணி உறுப்பினர்கள் நேர்காணல் நடைபெற உள் ளது. இந்நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணை செயலா ளர்கள் நேர்காணல் நடத்த உள் ளார்கள். எனவே ஒன்றிய, பேரூர்களில் இளைஞர் அணி யில் பணியாற்ற விண்ணப்பித்த அனைவரும் அவசியம் தவறா மல் கலந்து கொள்ள வேண்டும்,

மாநில இளைஞரணி செய லாளரும், இளைஞர் நலன் மற் றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் வருகை குறித்தும் ஆலோசிக்கப் பட்டது.

வரும் டிசம்பர் மாதம் 17 ந் தேதி சேலத்தில் நடைபெறும் மாநில இளைஞரணி மாநாட் டிற்கான அழைப்பிதழாக நாமக் கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட ஒருங்கிணைந்த இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் நாமக்கல் கிழக்கு மாவட் டம் சார்பாக சுமார் 15,000 இளைஞர்கள் பங்கு பெற வேண்டும். டிசம்பர் மாதம் நடைபெற உள்ள மாநில இளை ஞர் இளைஞர் அணி மாநாட் டிற்கு நாமக்கல் கிழக்கு மாவட் டத்தில் உள்ள ஒன்றிய நகர பேரூர்களில் இளைஞர் அணியி னர் திரளாக கலந்து கொள்ள வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்ற ப் பட்டது.

கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி அமைப் பாளர்கள். துணை அமைப்பா ளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்பரர் வ.இளம் பரிதி நன்றி கூறினார்.

# சென்னை தெற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம் நாளை 7.10.2023 சனிக்கிழமையன்று காலை 10 மணியளவில் நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள் ஆகியோர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்...

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**

செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.



பம்மல் வடக்குப் பகுதி பாக முகவர்கள் கூட்டம் – மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கி பேசினார். வட்டச் செயலாளர் இ.பாலாஜி ஏற்பாடு செய்த இக்கூட்டத்தில் துணை மேயர் கோ.காமராஜ், பா.டில்லி, கே.சந்திரன், மு.ஸ்ரீதர், இரா.குமரேசன், ஜி.கே.அரவிந்த், இரா.பாபுஜி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### வனத் துறை அமைச்சர் மா. மதிவேந்தன் பங்கேற்பு!

# நாமக்கல் மேற்கு மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அறிமுகம் - ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் அறிவிப்பு.

நாமக்கல், அக். 6 -

நாமக்கல் மேற்கு மாவட் டக் கழக அணிகளின் நிர் வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை நடைபெ றுகிறது. இதில அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்று ஆலோசனை வழங்குகி றார். இது குறித்து மாவட் டச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, கழக இளைஞர் அணி செய லாளர் இளைஞர் நலன் மற் றும் விளையாட்டு மேம் பாட்டு துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்க ளின் அறிவுறுத்தலின்படி, நாமக்கல் மேற்கு மாவட் டத்தில் புதியதாக நியமிக் கப்பட்ட அணிகளின் மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒருங்கி ணைப்பாளர்கள், துணை ஒருங்கிணைப்பாளர்கள் அறிமுகம் மற்றும் ஆலோச னைக் கூட்டம் நாளை 07.10.2023 சனிக்கிழமை காலை 11 மணி அளவில் திருச்செங்கோடு சங்ககிரி சாலை உள்ள நந்தா டவர்ஸ் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத் தலை வர் நடனசபாபதி தலைமை யில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னி லையில் நடைபெறுகிறது.



இந்நிகழ்விற்கு நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகி கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்கின் றனர்.

ஆகவே, இந்த அறிமுக கூட்டத்தில் இளைஞர் அணி, மாணவர் அணி, மக ளிர் அணி, மகளிர் தொண் டர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, பொறி யாளர் அணி, மருத்துவர் அணி, விளையாட்டு மேம் பாட்டு அணி, ஆதிதிராவி டர் நலக்குழு, சிறுபான்மை யினர் நல உரிமை பிரிவு, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி, தொழிலாளர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, அயலக அணி, நெசவாளர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற் றுச்சூழல் அணி, தொண் டர் அணி மற்றும் மீனவர் அணி மாவட்ட தலைவர் துணைத் தலைவர்கள் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் ஒருங்கி ணைப்பாளர்கள் துணை ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட் டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற் றாண்டு விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு நாமக்கல் மேற்கு மாவட்டச்செயலா ளர் எஸ்.எம்.மதுராசெந்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.




சென்னை மேற்கு மாவட்ட மகளிர் அணி– மகளிர் தொண்டரணி ஆலோசனை கூட்டம் நேற்று மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடந்த கூட்டத்தில் பங்கேற்று மகளிர் உரிமை மாநாடு மற்றும் உறுப்பினர் சேர்க்கை முகாம் குறித்து எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். உடன் கழக மகளிர் அணி இணை செயலாளர் குமரி விஜயகுமார் ,மாநில பிரச்சார குழு செயலாளர் ராணி ரவிச்சந்திரன், மாநில வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர்கள் யோகேஸ்வரி சுந்தரேசன்,லதா பிளாரன்ஸ், மற்றும் மாவட்ட மகளிர் அணி–மகளிர் தொண்டரணி தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.